பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை: 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: சித்திரை 17 (29—4—58) திங்கள் ★ வெளியூர்: சித்திரை 18 (30—4—58) செவ்வாய் [இதழ்: 264

இந்தி மொழி பேசாதோர்க்கு இழைத்த அநீதி!

நீக்கப்பட வேண்டுமானல்

ஆங்கிலமே இணைப்பு மொழியாக வேண்டும்!

அமெரிக்கவாழ் இந்தியர்களிடை அண்ணு கருத்து விளக்கம்

வாஷிங்டன், ஏப். 28

"தமிழ்நாட்டு மக்கள்மீது இந்தியைத் திணிப்பது, இந்தி பேசாத மக்களுக்கு நிரந்தரமான பாதகத்தையும், இந்தி பேசுவோருக்கு நிரந்தரமான சாதகத்தையும் ஏற்படுத்துவதாகும்" என்று அறிஞர் அண்ணு அவர்கள், இங்கு வெளிப்படையாகவே கருத்தறிவித்தார்கள்.

"ஆங்கிலம் மட்டுமே இணைப்பு மொழியாக இருக்க முடியும்; இப்பிரச்சினையில் உள்ள மனக்கசப்பை அகற்ற, இந்தி பேசும் மக்கள் இதனை ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்றும் அண்ணு அவர்கள் வேண்டிக்கொண்டார்கள்.

"மும்மொழித் திட்டத்தை இந்தி பேசும் மாநிலங்கள் செயல்படுத்தவில்லை; 'செயல்படுத்தும்படி அவர்களை வற்புறுத்த முடியாது' என்று தெரிந்த பிறகுதான், தமிழகம் மும்மொழித் திட்டத்தைக் கைவிட்டது" என்று [illegible] விளக்கமளித்தார்கள்.

இங்கு இந்தியத் தூதரகத்தில், இந்திய மக்கள் அடங்கிய பெரிய கூட்டமொன்றில் பேசுகையிலேயே அண்ணு அவர்கள் மேற்கண்டவாறு கருத்தறிவித்தார்.

இக்கூட்டத்தில் மொழிப் பிரச்சினை குறித்து அண்ணு அவர்கள் மேலும் குறிப்பிட்டதாவது:—

"சில ஆண்டுகள் அமெரிக்காவில் இருந்துவிட்டுத் தாயகம் திருப்பிவரும் தமிழர் ஒருவரால் இரண்டு மூன்று நாட்களுக்குப் பிறகுதான், தமிழில் சரளமாகப் பேச முடியும்; அப்போது அவரைப் பற்றிச் சிலர் சொல்லுவார்கள் — 'பார்த்தியா, பார்த்தியா; அமெரிக்காவில் சில ஆண்டு இருந்துவிட்டு வந்ததாலேயே இந்த மனிதனின் தலை துள்ளுகிறது; நம்மைப் போலத் தமிழ் பேச அவருக்குப் பிடிக்கவில்லை' என்று!

உண்மையில் கோளாறு அவர் தலையில் இல்லை—நாக்கில்தான் இருக்கிறது; அமெரிக்காவில் தமிழில் அதிகமாகப் பேச அவருக்கு வாய்ப்பு இல்லை; அதன் விளைவே அந்த நிலை!"

ஆங்கிலம் அறிந்தோர் தொகை மக்கட் தொகையில் இரண்டு சதவிகிதமே என்ற வாதத்துக்கு அண்ணு அவர்கள் பதிலளித்துப் பேசியதாவது:—

"இந்த இரண்டு சதவிகிதத்தினரும் நாடு முழுவதிலும் பரவியுள்ளனர்; ஆனல் இந்தி பேசுவதாகக் கூறப்படும் 40 சதவிகிதத்தினரும் இந்தி பேசும் மாநிலங்களில் மட்டுந்தானே இருக்கிறார்கள்?

இந்தியாவில் கல்வியறிவு பெருகும்போது ஆங்கிலம் அறிந்தோர் எண்ணிக்கையும் பெருகும். இப்போது கல்வியறிவு பெற்றோர் தொகை 20 சதவிகிதம் என்பது 40 சதவிகிதமாகவும், கடைசியில் 100 சதவிகிதமாகவும் உயருவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

ஆங்கிலம் வட்டார மொழிகளை அழித்து விடாது; இதற்கு எடுத்துக்காட்டாகக் கூற வேண்டுமானல், தமிழ்நாட்டில் தமிழ்தான் ஆட்சிமொழி—ஆங்கிலமல்ல!

இதேபோல், ஆங்கிலம் இணைப்புமொழியாக நீடித்தால் பிற மாநிலங்களிலும் வட்டார மொழிகள் வளர்ச்சியடையும்; மாநிலங்களுக்கிடையிலும், வெளியுலகுடனும் ஆங்கிலமே தொடர்பு மொழியாகப் பயன்படும்.

'ஆங்கிலம் வெளிநாடுகளுடன் தொடர்பு கொள்ளத்தான் பயன்படும்; உள்நாட்டுத் தொடர்புக்கு உதவாது' என்றும் ஒரு வாதம் கிளப்பப்படுகிறது; இதற்கு நான் ஒரு பழமொழியையே பதிலாகத் தர விரும்புகிறேன் 'பெரிய பூனை நுழைவதற்கு ஒரு சந்து இருந்தால், அதில் குட்டிப் பூனையும் நுழையும்' என்பதுதான்!"

காங்கிரசு ஆட்சியில் நடந்த பெரிய மோசடி

'நிலமற்ற ஏழை' என்ற பெயரால் மிராசுதார்கட்கு நிலம்

1,25,000 ஏக்கர் சட்டவிரோதமாக விநியோகம்

லக்னோ, ஏப். 28—

உத்தரப் பிரதேசத்தில் காங்கிரசு ஆட்சியின்போது, நிலமில்லாத ஏழைகளுக்கு நிலம் வழங்குவதன் பேரால் நடைபெற்றுள்ள பெரிய ஊழல் ஒன்று இப்போது வெளிப்பட்டிருக்கிறது.

இதுபற்றி, சம்யுக்த விதாயக் தள ஆட்சி நடந்தபோது, கடந்த அக்டோபர் திங்களில் விசாரணை நடத்த உத்தரவிட்டது.

முந்திய அரசின் நில விநியோகத்தில் ஊழல்கள் நடைபெற்றதாக புகார்கள் வந்ததன் பேரிலேயே இந்த விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

இவ்விசாரணை, மாநிலத்தில் உள்ள 44 மாவட்டங்களிலும் நடந்து முடிந்துவிட்டது.

1,25,825 ஏக்கர் நிலம் மூன்றாண்டுக் காலத்தில், காங்கிரசு ஆட்சியினல் சட்ட விரோதமாகத் துர் விநியோகம் செய்யப்பட்டிருக்கிறது.

சொந்த நிலமில்லாத விவசாயிகட்குக் கொடுப்பதற்குப் பதில், 'நிலமில்லாதவர்கள்' என்ற பெயரில் பெரும் நிலம் படைத்த மிராசுதார்களே பெரும்பாலும் அந்த நிலத்தைப் பெற்றிருக்கின்றனர்.

இதுபோன்று 53,838 பேர்கள் நிலம் பெற்றிருக்கின்றனர் என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த விசாரணை, ஒரு சப்-டிவிஷனல் மாஜிஸ்திரேட்டால் ஒவ்வொரு மாவட்டத்திலும் நடத்தப்பட்டது. எஞ்சியுள்ள 14 மாவட்டங்களிலும் வருகிற ஜுன் மாத இறுதிக்குள் விசாரணை முடிந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சட்டவிரோதமாக நிலம் பெற்றுள்ளவர்களுக்கு ஒதுக்கப்பட்ட நிலங்களை ரத்து செய்துவிடுமாறு மாஜிஸ்திரேட்டுகள் உத்தரவிட்டபோதிலும், அதுபற்றிய நடவடிக்கைகள் துரிதமாகவும் திருப்திகரமாகவும் நடைபெறவில்லை. இதில் சில சட்டச் சிக்கல்கள் எழுவதால் சிறிதுகாலம் பிடிக்கும்.

2,375-பேருக்கு சட்டவிரோதமாக ஒப்படைக்கப்பட்ட 4,828 ஏக்கர் நிலம் ரத்து செய்யப்பட்டுவிட்டது.

ஏழை இந்தியாவுக்கு ஏற்ற செயலா?

ரூ. 77 கோடி தண்டச் செலவு—எம். ஆர். மசானி கண்டனம்

புதுடில்லி, ஏப் 28—

சென்ற ஆண்டில், மத்திய அரசின் பல்வேறு துறைகளின் பணிகளைப் பரிசிலனை செய்த நாடாளுமன்றப் பொதுக் கணக்குக் குழுவினர், ரூ. 77 கோடிக்கு மேற்பட்ட இழப்புக்களையும், தவிர்த்திருக்கக் கூடிய செலவினங்களையும், ஊதாரிச் செலவுகளையும் சுட்டிக் காட்டியிருக்கிறது.

"நாட்டின் நிர்வாகத்தில் நடைபெறுவரும் மிகப் பெரும் சேதாரத்துக்கு இது ஓர் எடுத்துக்காட்டு; இந்தியா போன்ற ஏழை நாட்டுக்கு இது ஒத்து வராது"

என்று, கணக்குக் குழுவின் தலைவரான திரு. எம். ஆர். மசானி கூறினர்.

"தணிக்கை அறிக்கைகளமூலம் இத்தகைய தகவல்கள் கிடைப்பதில் தாமதம் ஏற்படுவது துரதிருஷ்டவசமானது; சேதாரங்களை வெளிப்படுத்தும் ஆக்கபூர்வமான பணிக்கு இதனல் தடங்கல் ஏற்படுகிறது" என்றும் அவர் குறிப்பிட்டார்.

அமெரிக்க மேதைகட்கு அறிஞர் அண்ணு அஞ்சலி

அரசியல் தலைவர்களுடன் அளவளாவல்—கருத்துப் பரிமாற்றம்

சனநாயகக் கட்சி மாநாட்டிலும் கலந்துகொண்டார்

வாஷிங்டன், ஏப். 28—

அமெரிக்காவில் சுற்றுப்பயணம் செய்யும் தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணு அவர்கள், அமெரிக்க நாட்டின் மேதைகளான ஆபிரகாம் லிங்கன், ஜெபர்சன், கென்னடி ஆகியோரின் நினைவுச் சின்னங்களுக்குச் சென்று மரியாதை செலுத்தினர்.

யேல் பல்கலைக் கழகத்திலிருந்து நேற்று மாலை இங்கு வந்து சேர்ந்த தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணு அவர்கள் முதல் நாள் முழுவதும் இங்குள்ள வரலாற்றுப் புகழ்மிக்க இடங்களையெல்லாம் காணுவதிலேயே செலவிட்டார்.

அரசுத்துறை அதிகாரிகளால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விருந்தொன்றில் அண்ணு அவர்கள் கலந்துகொண்டபோது, அரசுத்துறை அதிகாரிகளோடும் அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களோடும் கலந்துரையாடி கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளும் வாய்ப்பையும் பெற்றார் அண்ணு. அமெரிக்காவிலுள்ள இந்திய விவகாரத் துறைப் பிரதிநிதி திரு. பி. கே. பானர்ஜி, தூதுவர் (பொருளாதாரத்துறை) திரு. எஸ். ஜெகநாதன் ஆகியோரும் உடனிருந்தனர்.

தெற்கு ஆசிய விவகார உதவித் துணைச் செயலாளர் திரு. வில்லியம் ஹேண்ட்லி, அண்ணுவை வரவேற்றார்.

அண்ணு அவர்கள் வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் இந்தியாவின் ஒருமைப்பாட்டினை வலியுறுத்தியும், அமெரிக்கா போன்ற நாடுகள் இந்தியவின் முன்னேற்றத்துக்கு தொடர்ந்து உதவி செய்ய வேண்டுமென்றும் குறிப்பிட்டதாகத் தெரிகிறது. செய்தியாளர்கள் உள்ளே அனுமதிக்கப்படவில்லை.

லிங்கன்—ஜெபர்சன் நினைவு நிலையங்களில்..

இதற்கு முன்பாக அண்ணு அவர்கள், ஆபிரகாம்லிங்கன், ஜெபர்சன் ஆகியோரின் நினைவு நிலையங்களுக்குச் சென்று மரியாதை செலுத்தினர்.

கென்னடி கல்லறையில்..

ஆர்லிங்டனில் உள்ள கென்னடியின் கல்லறைக்கும் சென்று மரியாதை செலுத்திவிட்டு வந்தார்.

பார்வையாளராக....

அண்ணு அவர்கள் தங்கியிருந்த விடுதியில் அமெரிக்க சனநாயகக் கட்சியின் மாநாடும் நடைபெற்றது. அந்த மாநாட்டில், குடியரசுத் தலைவர் தேர்தலுக்குத் தாம் கட்சி வேட்பாளராக நிற்க விருப்புவதாக தற்போதைய துணைக் குடியரசுத் தலைவர் திரு. ஹம்பிரி அறிவித்தார். இந்த மாநாட்டில் அண்ணு அவர்களும் பார்வையாளராக அமர்ந்திருந்து அமெரிக்க அரசியல் நடைமுறைகளை நேரில் காணும் வாய்ப்பைப் பெற்றார்.

போர்டு அரங்கில்....

மாலையில் அண்ணு அவர்கள், போர்டு அரங்கில் உள்ள லிங்கன் அரும்பொருட்களஞ்சியத்தைப் பார்வையிட்டார்.

'காமடி ஆப் எர்ரர்ஸ்,' ('தொட்டதெல்லாம் தவறு') என்ற நாடகத்தையும் கண்டுகளித்தார்.

இந்த நாடக அரங்கில் நாடகம் ஒன்றைப் பார்த்துக்கொண்டிருந்தபோதுதான், ஆபிரகாம் லிங்கன் (1865-ல்) படுகொலை செய்யப்பட்டார். இப்போது அதைப் புதுப்பித்து, அரும்பொருள் களஞ்சியமாகக் காத்து வருகிறார்கள்.

வரலாற்று உறவு வளர்ந்தோங்கும்

அமெரிக்கவாழ்க்கையின் இயல்புகளை கண்டறிகிறார் அண்ணா

தலைநகர் வரவேற்ற சிறப்பு

பிரியா விடைதந்து வழியனுப்பியது யேல்

(அமெரிக்கத் தகவல் நிலையச் செய்தி)

வாஷிங்டன், ஏப். 27—

தமிழ்நாட்டு முதலமைச்சர் அண்ணா அவர்கள், வெள்ளி மாலை அமெரிக்கத் தலைநகர் வாஷிங்டன் வந்துசேர்ந்தார்.

இந்தியத் தூதரகப் பொறுப்பதிகாரி பி. கே. பானர்ஜி தலைமையில் இந்தியத் தூதரக அதிகாரிகள் திரளாக இரயில் நிலையம் சென்று தமிழக முதல்வரை எதிர்கொண்டு வரவேற்றனர்.

யேல் பல்கலைக் கழகம் இருக்கும் நியூஹேவன் நகரிலிருந்து ஆறரை மணி நேரம் இரயிலில் பயணம் செய்து தமிழகத் தலைவர் இங்குவந்து சேர்ந்தார்.

அண்ணா அவர்களும், அவரது குழுவினரும் இரயில் நிலையத்திலிருந்து கார் மூலம் ஷோர்ஹாம் ஓட்டலுக்குச் சென்றனர் ; தலைநகரில் அவர்கள், இங்குதான் தங்கியிருப்பர். இந்த ஓட்டல், 'ராக் கிரீக் பார்க்' என்னும் எழில்மிகு பூங்காவை ஒட்டியிருக்கிறது ; வாஷிங்டன் நகர மக்கள் மகிழ்ச்சியாகப் பொழுதுபோக்கும் இடங்களில் இந்தப் பூங்காவும் ஒன்று.

இயற்கை எழில்களைக் காணும் வகையில் இரயில் பயணம்

அண்ணா அவர்களின் 6½ மணி நேர இரயில் பயணம், பல மாநிலங்கள் வழியாக — அட்லாண்டிக் கடலோரமாக— இயற்கை எழிலை அவர் கண்டு மகிழும்வகையில் அமைந்திருந்தது.

நாட்டுப்புறங்களிலுள்ள பச்சைப் பசேல் என்ற பண்ணை நிலங்களையும் அவர் பார்த்தார் ; நகர்ப்புறங்களிலுள்ள எண்ணிறந்த ஆலைகளையும் பார்த்தார்.

இரயில் பெட்டியிலுள்ள கண்ணாடிப் பலகணி வழியாக அழகு மலியும் காட்சிகளைக் கண்டுவந்த முதல்வர், இரயிலின் உணவறையில் ஓய்வாகப் பகலுணவு உண்டபோதும் இந்த 'பார்வைச் சுற்றுலா' நீடித்தது.

அமெரிக்க வாழ்க்கையின் பல்வேறு இயல்புகளை கண்டார்

இளவேனில் வெயில் இயற்கைக்கு மேலும் அழகு சேர்த்துக்கொண்டிருந்தது. அமெரிக்க வாழ்க்கையின் பல்வேறு இயல்புகளையும் கண்ணாரக் காண்பதற்கு ஓர் அரிய வாய்ப்பு, இந்த இரயில் பயணம் !

பூங்காக்களில் அல்லது பள்ளித் திடல்களில் அமெரிகக இளைஞர்கள் 'பேஸ் பால்', 'பாஸ்கட் பால்' விளையாடுவதைக் கண்டார்.

மக்கள், வீட்டுத் தேவைப் பொருட்களை வாங்கும் பெரிய பெரிய கடைகள் மலிந்துள்ள பகுதிகளைக் கண்டார்.

பிலடெல்பியா அருகில் ஷுயில்கில் ஆற்றைக் கடக்கும்போது, கல்லூரி மாணவர் குழுக்கள், படகுகள் ஓட்டிப் பழகும காட்சிகளைச் சிறிது நேரம் கண்டார்.

"மிக்க மகிழ்ச்சியூட்டும்—உள்ளம் கொள்ளைகொள்ளும் இரயில் பயணம் இது" என்று முதல்வரின் செயலாளர் கே. சொக்கலிங்கம் உற்சாகத்தோடு இந்தச் சுற்றுலா பற்றிக் குறிப்பிட்டார்.

ஓய்வற்ற நாள்— கவர்னருடன் சந்திப்பு— அண்ணாவுக்கு வெள்ளித் தட்டு அன்பளிப்பு

வெள்ளிக்கிழமை தமிழக முதல்வருக்கு ஓய்வில்லாத ஒரு நாள் ; காலையில் காரில் கனக்டிக்கட் மாநிலத் தலைநகர் ஹார்ட்போர்ட் சென்று அங்கு கவர்னர் ஜான் டெம்ப்சியைக் கண்டு பேசினார் ; மாநிலச் சட்டமன்றக் கட்டடத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

இரு மாநிலங்களின் தலைவர்களும் தமக்குள்ள பொதுவான பிரச்சினைகள் குறித்து நெடுநேரம் பேசினர் ; நகர்ப்புறச் சீரமைப்பு — வேலைப் பயிற்சி—குடும்பக் கட்டுப்பாடு முதலியன, பேச்சுவார்த்தையில் இடம் பெற்றதாக அதிகாரி ஒருவர் கூறினார்.

முதல்வர் வருகைக்குச் சிறப்புச் செய்வதன் பொருட்டு, கவர்னர் டெம்ப்சி சிறிய வெள்ளித் தட்டு ஒன்றை அன்பளிப்பாக வழங்கினார் ; கனக்டிக்கட் மாநில முத்திரை இதில் பொறிக்கப்பட்டுள்ளது.

சந்திப்பின்போது, முதல்வருடன் துணை வந்தவர் எட்வர்டு கிரீன் ; தூதர் போல்சுடன் யேல் பல்கலைக் கழகத்தில் படித்தவர் ; 'இந்தப் பணி எனக்குப் பெரும் மகிழ்ச்சியளித்தது' எனக் கூறி, 'இது ஒரு பெருமை ; எனக்கு ஒரு அறிவு விளக்கம்' என்று கிரீன் குறிப்பிட்டார்.

யேல் பல்கலைக் கழகத்தில் உலகத் தமிழ் மாநாட்டுப் படம் திரையிடப்பட்டது

சென்னையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாடு பற்றிய வர்ணனைப் படம் ஒன்று, வியாழனன்று, யேல் பல்கலைக் கழகத்தில் திரையிடப்பட்டது.

டிமோத்தி டுவைட் கல்லூரி ஆசிரியர்களின் மனைவியர்—தமிழக முதல் அமைச்சர் அண்ணா சந்திப்பு நடைபெற்றது. இந்தச் சந்திப்பில் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி, இந்தப் படம் காட்டப்பட்டதாகும்.

கல்லூரி முதல்வர் தாமஸ் கோடார்டு பர்கின் மனைவி திருமதி பர்கின் உள்பட ஏறத்தாழ 15 பெண்மணிகள் இந்தப் படத்தைக் கண்டுகளித்தனர். அண்ணா அவர்கள் விருந்தாளியாகத் தங்கியிருக்கும் கல்லூரி முதல்வர் இல்லத்தில் இது திரையிடப்பட்டது.

அரை மணி நேரம் ஓடும் இந்தப் படத்தில் தமிழ்நாட்டின் சிறப்புக்களை விளக்கும் அலங்கார ரதங்களும், கிராமிய நடனங்களும், மாநாட்டுச் சிறப்பு நிகழ்ச்சிகளும் இடம் பெற்றுள்ளன.

"படம் என்னை மிகவும் கவர்ந்தது ; தமிழ்ப் பண்பாடு பற்றி ஈடு இணையற்ற உள்ளொளி ஊட்டியது" என்று திருமதி பர்கின் குறிப்பிட்டார்.

தம்முடன் அண்ணா கொண்டு வந்துள்ள இந்தப் படம், அருகில் மிடில் டவுனிலுள்ள வெஸ்லியன் கல்லூரி ஆசிரியர்களுக்கும் வியாழன் இரவு காட்டப் பெற்றது ; தலைநகர் வாஷிங்டனிலும் இது திரையிடப்படும்.

வகுப்பாசிரியராக அறிஞர் அண்ணா

யேல் பல்கலைக் கழக ஆசிரியர்களுடன் அவர்களது விடுதியில் அண்ணா அவர்கள் பகல் உணவு உண்டார். பிற்பகலில் பெரும் பகுதியும் வகுப்புகள் நடத்துவதில் அவர் ஈடுபட்டார். பாடம் நடத்துவது அவருக்கு மிகவும் பிடித்திருப்பதாகத் தோன்றியது.

'சப் பெல்லோஷிப்' பெற்று யேல் வந்துள்ள லேனார்டு பார்க்கின் என்பவரது அறையில், உலக விவகாரங்கள்—அரசியல் மேல் படிப்பு மாணவர்களை அண்ணா அவர்கள் சந்தித்தார்.

அண்ணா அவர்கள் இங்கு தங்கியிருந்த காலத்தில், அவருக்குப் பொதுத் துணைவராக உதவியவர் திரு. பார்க்கின்.

இந்தியாவின் பிரச்சினைகளையும், அதன் குறிக்கோள்களையும் மாணவர்கள் நன்கு உணர்ந்திருந்தனர் என்பதை அவர்கள் கேட்ட கேள்விகள், புலப்படுத்தின ; சில கேள்விகள், மதி நுட்பத்தையும் அறிவுத் தெளிவையும் வெளியிட்டன ; அப்போதெல்லாம் தமிழக முதல்வரின் முகம் மலர்ந்தது !

மக்கள் மனதில் நிலை பெற்றார் !

விடைபெறுகையில் உளம் நெகிழ்ந்தார்

யேல் பல்கலைக் கழகம் வழியனுப்பிய காட்சி

நியூஹேவன், ஏப். 27—

சில நேரங்களில் சிறிய நிகழ்ச்சிகள் மக்கள் மனத்தில் நீங்காமல் நிலைபெற்றுவிடுகின்றன !

யேல் பல்கலைக் கழகத்தில் படிக்கும் அல்லது ஆசிரியர்களாகப் பணியாற்றும் இந்தியர்கள் வெள்ளிக்கிழமை காலை நியூஹேவன் இரயில் நிலையம் வந்து முதலமைச்சருக்கு விடை கூறிய போது, அவர் உளம் நெகிழ்ந்துவிட்டார் என்பது தெளிவாகத் தெரிந்தது.

டாக்டர் ராமா சதுர்வேதியின் ஏழு வயது மகள், சிவப்பு வண்ண மலர்ச்செண்டு ஒன்றை வழங்கி விடைகூறியபோது, அண்ணாவின் முகம் நிலவென மலர்ந்தது ! அவரது கண்கள் பனித்தன !

டாக்டர் சதுர்வேதி, யேல் மருத்துவக் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார்.

இந்திய மரபுப்படி புடவை அணிந்திருந்த திருமதி சதுர்வேதியும், அவர்களது இரு இளைய மகன்களும் தமது நாட்டுத் தலைவரை அன்புடன் வழியனுப்பிவைத்தனர்.

தாய்நாட்டின் இனிய நினைவுகள் நிழலாடின !

மிடில்டவுன்—கனக்டிகட், ஏப். 27—

அண்ணா அவர்கள், வியாழனன்று மாலையில் இங்கு தமிழகத்தின் புகழ்பெற்ற இசைக் கலைஞர்கள் வழங்கிய தமிழ் இசை கேட்டு மகிழ்ந்தார். அப்போது தாய்நாட்டின் இனிய நினைவுகள் அவரது உள்ளத்தில் நிழலாடியிருக்கும் !

வெஸ்லியன் பல்கலைக் கழக இசைத்துறை இணைப் பேராசிரியரும் பல்கலைக் கழகத்தில் உலக இசை நிலையம் ஒன்றை நிறுவியுள்ளவருமான டாக்டர் ராபர்ட் பிரவுன் அவர்களின் பண்ணை இல்லத்தில் இந்த இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

தமிழக முதல்வரைத் தமது இனிய இசையினால் மகிழ்வித்தவர்கள் :—பி. சீனிவாசன் (தம்புரா); டி. விஸ்வநாதன் (புல்லாங்குழல்); எம். நாகேசுவர ராவ் (வீணை); டி. ரங்கநாதன் (மிருதங்கம்); வி. நாகராசன் (கஞ்சிரா).

தமிழகக் கலை மணம்

தமிழக இசைக் கலைஞர்கள் இந்த ஆண்டு உலக இசை நிலையத்தில் பல்கலைக் கழக மாணவர்களுக்குத் தமிழ் இசை கற்பித்து வருகின்றனர் ; விரிவுரைகளும் நிகழ்த்துவதுண்டு. இவர்களில் சிலரும், அவர்களது குடும்பத்தினரும், டாக்டர் பிரவுன்—அவரது தாயார் ஆகியோருடன் அவர்களது பழமையான பெரிய பண்ணை இல்லத்தில் வாழ்கின்றனர். நியூ இங்கிலாந்து கட்டடமரபில் அமைந்த இந்த இல்லத்தின் உள்புற அலங்கரிப்பு மன எழுச்சி ஊட்டுவதாகும் ; ஏனெனில், பலப் பல இந்தியக் கலைப் பொருட்கள் இந்த இல்லத்துக்கு அழகு ஊட்டுகின்றன. டாக்டர் பிரவுன் பலதடவை இந்தியா சென்று திரும்பும்போது கொண்[illegible]ந்த இந்தக் கலைப் பொரு[illegible]ளில் தமிழகத்தின் [illegible]மணம் மிளிர்பவை பல உண்டு.

தமிழ்க் கலைஞர்களில் மற்றவர்கள், அருகிலுள்ள 'இந்தியா இல்லம்' என்னும் மற்றொரு பண்ணை வீட்டில வாழ்கின்றனர். அமெரிக்க இசைக் கலைஞர்களோடும், உலக இசை நிலையத்தில் இந்த ஆண்டு பயில வந்துள்ள இந்தோனேஷிய—ஜப்பானிய இசைக் கலைஞர்களோடும் தமிழகக் கலைஞர்கள் சேர்ந்து வாழ்ந்து பொது அனுபவம் பெறுகின்றனர்.

'இசை ஐ. நா. மன்றம்' என்று இந்நிலையத்தைக் கூறலாம் உலக இசைக் கலைஞர்கள், பல நாட்டு இசைகளிலும் இன்பம் பெறவும், ஆர்வம் கொள்ளவும் நிலையம வகை செய்கிறது.

தமிழிசை பழகும் ஜப்பானியக் கலைஞர்

எடுத்துக்காட்டாக, ஜப்பானியர்கள், தமிழ்நாட்டு இசை பயில்கின்றனர் ; மேலும், நிலையத்திலுள்ள அமெரிக்கக் கலைஞர்களுக்கும் மற்றவர்களுக்கும் தமிழ் இசை கற்பிக்கின்றனர்.

தமிழர்கள் திரண்டு வரவேற்ற காட்சி

நியூ ஹேவன் நகரிலிருந்து அண்ணா அவர்கள், கார் மூலம் பிரவுன் இல்லத்துக்குத் தம் குழுவினருடன் வந்து சேர்ந்தார். இங்கு அவருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு அவருக்குத் தனி மகிழ்ச்சியளித்தது. வெஸ்லியன் பல்கலைக் கழகத்துக்கு வெகு அருகில் பண்ணை இருக்கிறது.

தமிழர்கள் திரளாக வந்து, பண்ணை இல்லத்தின் தலைவாயிலில் வரிசையாக நின்று—தமிழகத் தலைவரை எதிர்கொண்டு வரவேற்றனர்.

ஆண்கள் வேட்டியுடுத்தியிருந்தனர் ; பெண்கள் வண்ணப் புடவைகள் அணிந்திருந்தனர்.

புது மலர்களின் பெரிய செண்டு ஒன்றை முதல்வரிடம் அவர்கள் வழங்கி நல்வரவு கூறினர்.

தமிழகத்தின் ஊதுவத்தியும், வாசனைப் பொடிகளும் பண்ணை இல்லத்தில் நறுமணம் வீசின !

டாக்டர் பிரவுனும், அமெரிக்க மாணவர்களும் வேட்டியுடுத்தியிருந்தனர். தமது அன்னைக்கும், வந்திருந்த பெருமக்களுக்கும் முதல்வரைப் பேராசிரியர் அறிமுகம் செய்து வைத்தார்.

பெரிய தாழ்வாரத்தில் வசதியான ஒரு நாற்காலியில் அமர்ந்தவண்ணம் அண்ணா அவர்கள், இசை நிகழ்ச்சியைக் கேட்டு மகிழ்ந்தார்.

அவரைச் சுற்றிலும் அமெரிக்கர்களும், தமிழர்களுமாகப் பலர் தரையில் திண்டுகளில் அமர்ந்து இசை கேட்டனர்.

ஜான் ஹிகின்ஸ், தமிழ்க் கீர்த்தனைகள் பாடினார் ; இவர் தமிழகம் வந்து இசை பயின்று, 'ஹிகின்ஸ் பாகவதர்' என்னும் சிறப்புப் பெற்றவர்.

தமிழர்கள் ஆர்வம்

முதல் அமைச்சரை வரவேற்பதற்காக நடைபெற்ற இந்த இசை விழாவுக்கு கனக்டிக்கட், நியூயார்க் மாநிலங்களிலுள்ள மற்றும் பல நகரங்களிலிருந்து பல தமிழர்கள் காரில் வந்திருந்தனர்.

தாய்நாட்டின் நினைவுகளை நனவாக்கியது!

இசை நிகழ்ச்சிக்குப் பின்பு விருந்து நடைபெற்றது. தமிழ்ப் பெண்களும், அமெரிக்கப் பெண்களுமாகச் சேர்ந்து சுவையுடன் சமைத்த தமிழக உணவு வகைகள் எல்லாம் இருந்தன ; முதல்வர் அவற்றை விரும்பியுண்டார்.

அண்மையில் சென்னையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டுத் திரைப்படம், விருந்துக்குப் பின்பு காட்டப்பெற்றது. கண்கவரும் வண்ணப் படம் இது. முதலவர் தம்முடன் இதைக் கொண்டு வந்துள்ளார். அவர் போகும் மற்ற நகரங்களிலும் இது திரையிடப்படும். அமெரிக்காவிலேயே முதன் முதலாக இது யேல் பல்கலைக் கழகத்தில் காட்டப்பட்டது.

வந்திருந்தவர்கள் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாக அமைந்தது, இந்தப் படம். குறிப்பாக பல ஆண்டுகளாக இங்கு இருந்து வரும் தமிழர்களுக்கு இது தேனாகத் தித்தித்தது. இளைஞர்களுக்குக் கனவு போலிருந்த தமது தாய்நாட்டு நினைவுகளை இது நனவாக்கியது என்று சொல்லலாம்.

படம் முடிந்ததும், 'நான் அங்கேயா பிறந்தேன்?' என்று பல குழந்தைகள், தம் பெற்றோரிடம் கேட்டுக் கொண்டிருந்தன !

வியாழன் இரவு அண்ணா அவர்கள், காரில் யேல் பல்கலைக் கழகத்திலுள்ள டிமோத்தி டுவைட் கல்லூரிக்குத் திரும்பிச் சென்று, 'சப்' விருந்தாளியாகக் கடைசி இரவை அங்கு கழித்தார்.

வரலாற்று ஆராய்ச்சி உறவுகள்— அண்ணா வருகையால் வளர்ந்தோங்கும்

தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்களின் வருகை காரணமாகத் தமிழகத்துக்கும்—யேல் பல்கலைக் கழகத்துக்கும் இடையே புதிய வரலாற்று ஆராய்ச்சி உறவுகள் வளர்ந்தோங்கும் வாய்ப்புப் பிறந்துள்ளது.

இந்தியாவிலுள்ள அமெரிக்கத் தூதர் செஸ்ட்டர் போல்ஸ்

(3-ம் பக்கம் பார்க்க)

வறுமையில் உழன்ற தீவு

வளங் கொழிக்கும் நாடாக மாறிய விந்தை!

உழைப்பால் உயர்ந்த போர்ட்டோ ரீகோவின் உன்னத நிலை--

அண்ணு காணப்போகும் அரிய காட்சிகள்

தமிழக முதல் அமைச்சர் அண்ணு அவர்கள், ஏப்ரல் 29-ம் நாள், கரீபியன் கடலிலுள்ள 'போர்ட்டோ ரீக்கோ' என்னும் சிறிய தீவு போய்ச் சேருவார்.

மிகவும் பின்தங்கிக் கிடந்த ஒரு நாடு, தனது சொந்த முயற்சிகளினுல் மிக விரைவில் வளர்ந்தோங்கி வளம் கொழிக்க வாழ்வதற்கு போர்ட்டோ ரீக்கோ ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

உள்ளம் கொள்ளை கொள்ளும் இந்தப் பொருளாதார வளர்ச்சியை நேரில் காண்பதற்கு, வளர்ந்துவரும் நாடுகள் பலவற்றின் தலைவர்கள் இந்நாட்டுக்குச் சென்றவண்ணமிருக்கின்றனர்! இவர்களது நீண்ட பட்டியலில் தமிழக முதல்வரும் இடம் பெறுகிருர்!

சோர்வு மனப்பான்மைக்கு முற்றுப்புள்ளி!

வளமைக்கு வழிவகுத்த சுய முயற்சித் திட்டத்துக்கு 'ஆப்பரேஷன் பூட்ஸ்ட்ராப்' என்று பெயர்; 1942-ல் இது நடப்புக்கு வந்தது. இதற்குமுன்பு நாட்டின் வருவாய் மிகச் சொற்பம்; மக்கள் தொகையோ பெருகிக் கொண்டு வந்தது; 'உய்வே கிடையாது' என்று தோன்றியது; ஆனுல் புதிய திட்டம், இந்தச் சோர்வு மனப்பான்மைக்கு முற்றுப்புள்ளி வைத்தது.

புதிய தொழில்கள் தோன்றவும், புதிய வேலைகள் கிடைக்கவும், மக்களுச்குப் புதிய வாழ்க்கை வசதிகள் பெருகவும் வழிவகுத்தது!

1950 முதல் ஆண்டுச்கு சராசரி 6 சதவீதம் என்ற விகிதத்தில் வருவாய் பெருகிவந்துள்ளது.

ஒரு காலத்தில், கரீபியப் பகுதியின் 'வறுமை நாடு' என்று குறிப்பிடப்பட்ட போர்ட்டோ ரீக்கோவில், இன்று லத்தீன் அமெரிக்க நாடுகள் அனைத்தையும்விட தனி நபர் வருமானம் மிக அதிகமாக இருக்கிறது.

மக்களின் சராசரி ஆயுட் காலமும் 46 வயதிலிருந்து 71 வயதாக உயர்ந்துள்ளது.

உழைப்பின் வெற்றி

பயனுள்ள முறையில் விஞ்ஞானத்தைக் கையாண்டால் என்னென்ன சாதிக்க [illegible]யும் என்பதற்கு ஓர் எடுத்து[illegible]ாக இன்று விளங்குகிறது—இந்தச் சிறிய தீவு!

வெகு வேகமாகத் தொழில்கள் வளர்ச்சியடைந்து, இன்று அது ஆலைப் பொருட்களை முக்கியமாக ஏற்றுமதி செய்கிறது

வேளாண்மைத் துறையில் இன்னும் கரும்புச் சாகுபடிக்குத் தான் இங்கு முதலிடம். விளைநிலத்தில் பாதியில் கரும்பு பயிராகிறது. ஆர்வத்துடன் நிறைவேற்றி வைக்கப்பட்ட நிலச் சீர்திருத்தங்களும், அதிசப்படி நிலங்களை நிலமற்ற விவசாயிகளுக்குப் பகிர்ந்து கொடுத்ததும் விளைபொருள் உற்பத்தி பெருகுவதற்குத் துணை செய்துள்ளன.

ஒரு விரிவான வளர்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியே நிலச் சீர்த்திருத்தம். தொழில், சுற்றுலா, போக்குவரத்துத் துறைகளின் வளர்ச்சி, குடியிருப்பு, கல்வி, மருத்துவம் மற்றும் முதலிய வசதிகள் அதிகரிப்பு ஆகியவையும் அத்திட்டத்தில் இடம் பெற்றன.

பழமையும் புதுமையும்

போர்ட்டோ ரீக்கோ, தன்னுட்சி நடைபெறும் ஒரு தனி நாடு; எனினும், அமெரிக்காவுடன் அது நெருங்கிய உறவு கொண்டுள்ளது.

தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றமும் கவர்னரும் உண்டு.

ஸ்பானிய மரபுள்ள இத்தீவு, கடந்த 60 ஆண்டுகளுக்கு மேலாக அமெரிக்காவுடன் நெருங்கிய உறவு கொண்டு வாழ்ந்து வந்துள்ளபோதிலும், தனது தனிப் பண்பாட்டுச் சிறப்புக்களைப் பேணிப் பாதுகாத்து வருகிறது.

அரசியல், பொருளாதாரத் துறைகளில் மட்டுமே அமெரிக்கச் செல்வாக்கு காணப்படுகிறது.

அமெரிக்க நாட்டு நிர்வாகத் திறன்கள், திட்டமிடுதல், தொழில் நுட்ப அறிவு ஆகியவற்றைப் போர்டோ ரீக்கோ தனது வளர்ச்சித் திட்டத்தில் மேற்கொண்டு, மக்களின் வாழ்க்கை நிலையை கால் நூற்றுண்டுக்கு முன்பு கனவுகூடக் கண்டிராத அளவுக்கு உயர்த்தியுள்ளது என்பது குறிப்பிடத் தக்கது.

புதுடில்லி மாநகராட்சியில் ஊழல்கள்!

மறைத்து வைக்கப்பட்ட 20,000 'பைல்'கள் கண்டுபிடிப்பு!

புதுடில்லி, ஏப். 28—

புதுடில்லி மாநகராட்சியின் தென்பகுதி அலுவலகத்தில் உள்ள ஓர் அறையின் பரணையில் 20,000 'பைல்'கள் குப்பைகளுச்கு அடியில் மறைத்து வைக்கப்பட்டிருந்தது, கண்காணிப்புத்துறை அதிகாரிகளால் கண்டுபிடிதகப்பட்டு வெளியே கொண்டுவரப்பட்டன.

மாநகராட்சி அதிகாரிகள்சிலர், மாநகராட்சிக்குச் சட்டப்படி கிடைக்கவேண்டிய வருவாயைக் கெடுத்து, மக்களிடம் பணம் பெறும்வகையில் ஊழல்களில் ஈடுபட்டிருப்பதாகத் துணைமேயர் சந்தேகப்பட்ட தன்பேரில், இக்கட்டிடத்தில் சோதனையிடப்பட்டது.

கண்காணிப்பு அதிகாரிகள் ஆயிரம் 'பைல்'களை வெளியே எடுத்துப் பிரித்துப் பார்த்ததில், அவற்றில் பலவற்றில் மாநகராட்சிக்குக் கொடுக்க வேண்டிய கட்டணத்துக்கும் அபராதத்துக்குமான 'செக்'குகள் பல இருந்தனவாம். அவற்றில் சில 1962-ம் ஆண்டுக்கு முந்தியவையாம!

தண்ணீர்க் குழாய் இணைப்புக்கு அளிக்கப்பட்ட அனுமதிகள் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பப்படாமலும், சுகாதாரத்தைப் பாதிக்கும்வகையில் சட்டத்தை மீறிய உணவு விடுதி மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிவிப்புகள், தொடர்புடையவர்கட்குப் பட்டுவாடா செய்யப்படாமலும் இருந்தன.

ஓராண்டுக்கு முன்பு சதாராவில் உள்ள ஓர் அறையில், இதே மாதிரி 11,000 'பைல்'கள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

வங்கத் தமிழர் சங்கம்

அண்ணு மணிவிழா மலர்க் குழு

இவ்வாண்டு செப்டம்பர் திங்களில், கல்கத்தாவில் வங்கத் தமிழர் சங்கம் கொண்டாடவிருக்கும் அறிஞர் அண்ணு மணி விழாவினைபொட்டி வெளியிடப்படவிருக்கும் மலரினை உருவாக்கும் பொருட்டு, கீழ்க்கண்ட பிரமுகர்களைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது.

இம்மலரில் இடம்பெறும் விளம்பரங்களிலிருந்து கிடைக்கும் தொகை முழுவதும், இச்சங்கத்தல் கல்கத்தா—அவுரா பகுதியில் நடத்தப்படும் இலவசத் தமிழ்த் தொடக்கப் பள்ளிக் கட்டிட நிதிக்குப் பயன்படுத்தப்படும்.

அறிஞர் அண்ணு அவர்களின் சிறப்புக் குறித்துத் தமிழிலும், ஆங்கிலத்திலும் கட்டுரைகள் தந்துதவுமாறு எழுத்தாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிருர்கள்.

வணிக நிறுவனங்கள் தங்களின் விளம்பரங்களை அளிப்பதன் மூலம் வங்கத்தில் தமிழ்க் கல்வி அளிக்கும் திருப்பணிக்கு உதவுமாறு வணிகப் பெருமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிருர்கள்.

இம்மலரை வெளியிடத் தமிழகப் பொதுப் பணித்துறை அமைச்சர் மு. கருணுநிதி அவர்களும், மணி விழாவுக்குத் தலைமை வகிக்க தமிழகச் சட்டத் துறை அமைச்சர் செ. மாதவன் அவர்களும் அழைக்கப்பட்டிருக்கின்றனர்.

மலர்க் குழு

தலைவர் :— சங்கத் தலைவர் டி. என். தங்கதுரை.

அமைப்புச் செயலாளர் :— மா. செங்குட்டுவன் ('நம் நாடு').

உறுப்பினர்கள் :— பேராசிரியர் க. அன்பழகன் எம்.பி., டாக்டர் சி. இலக்குவனுர், செ. கந்தப்பன் எம்.பி., முரசொலி மாறன் எம்.பி., ஆ. ச. அ. அப்துஸ் சமது எம்.பி., தா. கிருட்டினன எம்.பி., பேராசிரியர் மா. கி. தசரதன், கவிஞர் கா. வேழவேந்தன் எம்.எல்.ஏ., சரு. சீமைச்சாமி எம்.எல்.ஏ., எஸ். இராகவானந்தம் எம்.எல்.சி., திருமதி அலமேலு அப்பாத்துரை எம்.எல்.சி., புலவர் முருகையன் எம்.எல்.ஏ., புலவர் மி. ச. நடேசன், நீலநாராயணன், எஸ். எஸ். தென்னரசு, அன்பில் தர்மலிங்கம், இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன், சலகண்டபுரம் ப. கண்ணன், பி. எஸ். இளங்கோ (ஆசிரியர், 'மாலை மணி'), மு. சண்முகம் ('அறிவகம்'), சிறுவை மோகனசுந்தரம் (நக்கீரர் கழகம்), கோ. பன்னீர்செல்வம் (தமிழ் எழுத்தாளர் சங்கப் பொதுச்செயலாளர்), வ. அ. கருணை (மதுரை எழுத்தாளர் மன்றம்), சா. கணேசன் எம்.சி., ஓவியர் மா. முத்து, இரா. சனுர்த்தனம் (மாணவர் தலைவர்), திரைப்பட இயக்குநர் டி. என். பாலு, திருமதி அமுதாராகவன், இரா. முத்துக்கிருட்டினன் (பூரணன்), எம். இராமையா, திருவாரூர் எஸ். இராசகோபால், மா. கருப்பையா, வ. மணிவண்ணன், டி. வீரையா, சாலை இளந்திரையன் (புதுடில்லி), செ. வீரபத்திரன், எஸ். தியாகராசன், த. மு. பொற்கோ (பம்பாய்), கே. வீரமணி ('விடுதலை' ஆசிரியர்), எம். ஏ. சண்முகம் (புதுவை), திருமதி சம்பவதி வெங்கடாசலம் (மாநில சமூக நலக் குழு).

சென்னை -- வால்காகிராடு நட்புறவு

மேலும் வலுப்பட உடன்பாடு

சென்னை, ஏப். 26—

சோவியத் நகரான வால்காகிராடுக்கும்—சென்னை நகருக்கும் இடையே சென்ற ஆண்டு ஏற்பட்ட நட்புறவை மேலும் உறுதிப்படுத்தும் வகையில், இன்று ஒரு நட்புறவு மாநாடு இரு மாநகராட்சிகளுக்குமிடையே கையெழுத்தாயிற்று.

வால்காகிராடும்—சென்னையும் நட்புறவு பெற்ற இரட்டை நகரங்களாகச் சென்ற ஆண்டு அறிவிக்கப்பட்டன.

சென்னை நகர மேயர் டாக்டர் அபிபுல்லா பேக் அவர்கள் சென்னை நகரச் சார்பிலும், வால்காகிராடு துணை மேயர் திரு. அலெக்சாண்டர் மெமிஷின் வால்காகிராடு நகரச் சார்பிலும் நட்புறவு அறிக்கையில் கையெழுத்திட்டனர்.

இந்த இரு நகரங்களும் ஒன்றுக்கொன்று தூதுக் குழுக்களையும் திரைப்படங்களையும் புகைப்படக் கண்காட்சிகளையும், புகழ்பெற்ற நாட்டுப் பாடல்களின் ஒலிப்பதிவு (டேப் ரிக்கார்டு)களையும், நகரமைப்புக்கான சாதனங்களையும், ஏனைய நகர நலத் தொடர்பான சாதனங்களையும் பரிமாறிக்கொள்ளவிருப்பதுடன் இரு நகரங்களுக்கிடையே பேனு நண்பர்களை ஊக்குவிக்கவும் ஆவன செய்யப்படும்.

சென்னை நகரக் குழந்தைகளால், வால்காகிராடு குழந்தைகளுக்கு அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்ட பொம்மைகளை சென்னை மேயர், திரு. மெமிஷினிடம் அளித்தார். (வால்காகிராடில் 75 இலட்சம் குழந்தைகள் உள்ளனர்.)

திரு. மெமிஷின், டாக்டர் அபிபுல்லா பேக் அவர்களைத் தம் சொந்த முறையில் வால்காகிராடுக்கு அழைத்ததாகத் தெரிகிறது.

வால்காகிராடு மாநகராட்சி சார்பில் மூன்று பேரடங்கிய தூதுக் குழுவிற்குத் தலைமை வகித்து இங்கு வந்துள்ள திரு. மெமிஷின், பத்து நாட்கள் இங்கு தங்கியிருந்தார். பல இடங்களையும் தூதுக் குழுவினர் பார்வையிட்டனர்.

மதுரை மீனுட்சிக் கோயிலைக் கண்டு தாம் வியந்ததாகச் செய்தியாளர்களிடம் அவர்கள் கூறினர்.

தொழில் மயமான தமிழகத்து மக்களைப் பற்றி அவர்கள் புகழ்ந்துரைத்தனர்.

உயர்ந்ததொரு பண்பாட்டை நாங்கள் உருவாக்கிவந்துள்ளோம்.

"உங்களுடைய நகர மக்களுக்கு என்னுடைய உளமார்ந்த நல்வாழ்த்துக்களை அன்புகூர்ந்து தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்."

இந்நகராட்சிமன்ற உறுப்பினர்களுக்கு வாழ்த்தும் வணக்கமும் செலுத்தும் வகையில், அவர்களுக்கு உள்ளாட்சித் துறை அமைச்சர், அன்றிரவு அரசாங்க விருந்தளித்தார். அமைச்சர்கள் கே. ஏ. மதியழகன், ஏ. கோவிந்தசாமி, மேயர் அபிபுல்லா பேக், சட்டமன்ற—நகராட்சிமன்ற உறுப்பினர்கள் விருந்தில் கலந்துகொண்டனர்.

தமிழகக் கிராமக் கைத்தொழில் ஆயத்தின் சார்பாக சந்தன மரத்தால் உருவாக்கப்பட்ட கவின் பொருள்களை (யானைகள்) உள்ளாட்சித் துறை அமைச்சர், சோவியத் நாட்டு விருந்தினருக்குப் பரிசாக அளித்தார்.

அமைச்சர் முத்துசாமி விருந்தோம்பல்

சோவியத்நாட்டிலுள்ள வால்காகிராட் நகராட்சிமன்றத்தைச் சேர்ந்த மூவர் அடங்கிய தூதுக் குழு ஒன்று தமிகத்திற்கு வருகை தந்துள்ளது.

இந்நகராட்சிமன்ற உறுப்பினர்கள் ஏப் 17-ம் நாள் மாலை 4-30 மணியளவில், தமிழக அரசுத் தலைமைச் செயலகத்தில், உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மா. முத்துசாமி அவர்களைச் சந்தித்து அளவளாவினர்.

துணை மேயரையும், மற்ற இரு நகராட்சிமன்ற உறுப்பினர்களையும் அமைச்சர் வரவேற்றுப் பேசுகையில் கூறியதாவது :—

" நவில் தொறும் நூல் நயம்
போலும் --- பயில் தொறும்,
பண்புடையாளர் தொடர்பு." —குறள்

" 'வால்கா கிராட்' நகரத்தின் துணைமேயர், நகராட்சி உறுப்பினர்கள் ஆகியோரை வரவேற்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். உங்கள் நாட்டைப்போலவே, எங்கள் நாடும் பழம் பெருமை வாய்ந்தது. பல நூற்றுண்டுகளாகவே கவிதை, இலக்கியம், நுண் கலைகள் ஆகியவற்றின் சிறப்பியல்புகளை அடிப்படையாகக் கொண்டு, மிக

சுதந்தரம் கிடைத்தும் சோறில்லை!

ஆக்ரா, ஏப். 27—

"சுதந்தரம் கிடைத்து இருபது ஆண்டுகளாகியும், 'மக்களுக்கு நாள்தோறும் வயிருர உணவு அளித்துவிட்டோம்' என்ற நிலைமை இன்னும் ஏற்படலில்லை!

"அனைவருக்கும் வேலை கிடைக்கும்படி செய்யவேண்டும்; 'அது இயலக்கூடியதல்ல' என்ருல், அதற்காக நிதி உதவியும், முதியோர் ஓய்வுக்காலப் பணமும் அளிக்கப்படுவது அவசியம்."

---வி. வி. கிரி
(துணைக் குடியரசுத் தலைவர்)

வரலாற்று ஆராய்ச்சி...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களின் நண்பர் எட்வர்டு கிரீன், இந்தப் புதிய வாய்ப்பு குறித்து மிகுந்த உற்சாகம் கொண்டுள்ளார்.

பிரிட்டிஷ் ஆட்சியின்போது தமிழகக் கவர்னராக இருந்த எலிஹு யேல் வழங்கிய நன்கொடையால் புது வாழ்வும் வளமும் பெற்றது, இந்தக் கல்வி நிலையம்.

இதற்கு நன்றி பாராட்டும் பொருட்டே, பல்கலைக்கழகத்துக்கு யேல் பெயர் சூட்டப்பெற்றது. நெடுநாளைக்குமுன்பு வரையப்பட்ட எலிஹு யேல் உருவப் படம் ஏற்கனவே இந்தப் பல்கலைக் கழகத்தில் இருக்கிறது.

முன்னுள் அதிபர் ஐசன்ஹாவருக்கு அன்பளிப்பாகத் தமிழகம் வழங்கிய இந்த உருவப் படத்தை, அவர், யேல் பல்கலைக் கழகத்துக்குக் கொடுத்தார்.

கவர்னர் யேலின் பழைய நாட்குறிப்புகள், கடிதங்கள் முதலியன தமிழகத்தின் ஆவணக் களறியில் இருக்கக்கூடுமென எட்வர்டு கிரீனும், மற்றும் உற்சாகமிக்க யேல் பழைய மாணவர்களும் கருதுகின்றனர். வரலாற்றுச் சிறப்புள்ள இந்தக் குறிப்புக்களும், பத்திரங்களும் இருக்கின்றனவா என்று கண்டு ஆராய்வதில் தாம் ஒத்துழைப்பதாகத் தமிழக முதல்வரின் செயலாளர் கே. சொக்கலிங்கம் உறுதியளித்துள்ளார்.

யேல் பல்கலைக் கழக 250-வது ஆண்டு விழாக் கொண்டாட்டங்களின்போது அவற்றையெல்லாம் காட்சியில் வைக்க அது ஆர்வம் கொண்டுள்ளது.

முதலாளி-தொழிலாளரிடை நல்லுறவு

பிறர் தலையீடின்றி இயங்க முயலுவீர்

சென்னைத் தொழிற் சங்கப் பொன் விழாவில்

அமைச்சர் நெடுஞ்செழியன் ஆய்வுரை

சென்னை, ஏப். 28—

"'எவ்வளவு வேலையாக இருந்தாலும்சரி—எவ்வளவு நேரமானாலும்சரி—எந்த நேரமானாலும்சரி—அந்த வேலையைத் தர வேண்டியது தொழிலதிபர்களின் விதி; அதைச் செய்து முடிக்க வேண்டியது தொழிலாளர்களின் விதி' என்றிருந்த காலம்—தொழிலாளர்கள் அடக்கப்பட்டு ஒடுக்கப்பட்டு இருந்த காலம் ஒன்றிருந்தது; இன்று அந்த நிலை மாறி, 'சக்திக்கேற்ற உழைப்பு; உழைப்புக்கேற்ற ஊதியம்' எனும் அடிப்படையில் தொழிலாளர்கள் இயங்கிவருவதைக் காண்கிறோம்!

"'எந்த நேரத்திலும்—எந்த வேலையையும்—எவ்வளவு வேலையையும் செய்துதான் தீரவேண்டும்' என்று இருந்த காலம் மாறி, இன்று, ஒரு நாளுக்குரிய 24 மணி நேரத்தில் உழைப்பதற்கு 8 மணி நேரத்தையும், உண்டு களித்து உல்லாசமாகப் பொழுதுபோக்க 8 மணி நேரத்தையும், எஞ்சியுள்ள 8 மணி நேரத்தைத் தூங்குவதற்குமாகப் பிரித்து இன்றையத் தொழிலாளர் உலகம் பணியாற்றுகிறது!

"தினம் உழைக்கும் 8 மணி நேரத்தை 6 மணியாகக் குறைக்கலாமா என்றும், வாரத்துக்கு ஒரு நாள் ஓய்வு என்றிருப்பதை இரு நாட்களாக ஆக்க முடியுமா என்றும் பல முன்னேற்ற நாடுகள் ஆலோசனை செய்துவருகின்றன."

இவ்வாறு தொழிலமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், சென்னை தொழிலாளர் சங்கத்தின் பொன் விழாவின் இரண்டாம் நாள் கூட்டத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது:—

நிலைமைதான் என்ன?

"நம் நாட்டில் இதுவரையில் அமைந்ததைவிட, இனி அமைய வேண்டிய தொழிற்சாலைகள் ஏராளமாக இருக்கின்றன.

மேலும், நம் நாட்டில் 80 சதவீதத்தினர் சிற்றூர்களில் வாழ்கின்றனர்; அவர்களில் 75 சதவீதத்தினர் உழவுத் தொழில் செய்கின்றனர்; 35 இலட்சம் பேர் நெசவுத் தொழில் செய்கின்றனர்.

'உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்கு அளவும் மிஞ்சாது' என்பதற்கு ஏற்பவே நிலைமை இருக்கிறது!

ஆனால் அமெரிக்காவில், 11 சதவீதத்தினரே உழவர்கள்! அந்த 11 பேர் உழவுத் தொழில் செய்துதான் 89 பேருக்கு உணவளித்து—அதிலும் எஞ்சுவதை, ஏழை நாடுகட்குக் கொடுத்து உதவுகின்ற அளவுக்கு அவர்கள் முன்னேறியுள்ளனர்!

முதலீட்டை ஆளுபவர் முதலாளி—தொழிலைக் கையாளுபவர் தொழிலாளி! இந்த இரண்டினையும் கையாளுவோருக்கிடையே நியாயமான—அடிப்படையான உறவு இருக்குமானால், நீதி மன்றம் இன்றி—அடுத்தவர் தலையீடின்றி என்றென்றும் சமாதானமாகப் போகலாம்.

'தொழிலாளர்கள்' என்ற உணர்வுடன்..

பல்வேறு அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்கள் தொழிற்சங்கங்களில் ஈடுபட்டிருந்தாலும், 'தொழிற்சங்கம்' என்ற அமைப்பினகீழ் வரும்போது, 'தொழிலாளர்கள்' என்ற ஒரே உணர்வோடு அரசியல் அடிப்படை இல்லாத ஒரு சூழ்நிலையை உருவாக்கவேண்டும்.

'தொழிற்சங்கம்' என்ற அமைப்பில் வந்துவிட்ட பின்பு எதையும் மறந்துவிட்டு, அந்தத் துறையில் பயிற்சிபெற்றோரிடம்—ஈடுபாடு கொண்டோரிடம்—திறமை, அறிவு, ஆற்றல் படைத்தோரிடம் தொழிற்சங்கப் பொறுப்புக்களை ஒப்படைக்கலாம்.

தொழிற்சங்கத் தலைவர்கள்—தொழிலாளர் தரப்பு வழக்கறிஞர்கள் ஆகியோர், தொழிலாளர்களுக்காக வாதாடக்கூடியவர்கள்; இதில் அரசியல் எண்ணம் வரத் தேவையில்லை!

இந்த முறையில் தொழிற்சங்கம் வளருமானால், தொழில் பெருகும்—உற்பத்திப் பெருகும்—தமிழகம், பிற மாநிலங்களுக்கெல்லாம் வழிகாட்டியாகத் திகழும்!

அப்படி ஒரு சூழ்நிலையினை தனி ஒரு மனிதனால் உருவாக்க முடியாது! நாட்டின் நலன் கருதி நானும் நீங்களும், எல்லோரும் ஒன்று சேர்ந்துதான் அந்தச் சூழ்நிலையை உருவாக்க வேண்டும்!"

அரிசிமூட்டை பறிமுதல்

சென்னை, ஏப். 29—

நேற்று காலையில் செங்கற்பட்டு, கூடுவாஞ்சேரி இரயில் நிலையங்களில்—விழுப்புரம், காஞ்சிபுரம் பாசஞ்சர் இரயில்களில் காவற்துறையினர் சோதனை நடத்தி 190 மூட்டை அரிசியைக் கைப்பற்றினர்.

இந்த அரிசி மூட்டைகள் நகருக்குக் கொண்டுவரப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இரயில்களிலிருந்து இந்த மூட்டைகள் கைப்பற்றப்பட்டபோதிலும், அரிசியைக் கடத்தியவர்கள் தப்பி ஓடிவிட்டனர்.

தொழிலாளர்கள் சிக்கலில் அரசு தலையீடு எப்போது?

ஐம்பது ஆண்டுகளாகியும் வரையறுக்கப்படாத பிரச்சினை

சென்னைத் தொழிற்சங்கப் பொன்விழாவில்

அமைச்சர் செ. மாதவன் உரை

சென்னை, ஏப். 29—

"'தொழில் அமைதிக் குறைவு' என்று கூறி தொழிலதிபர்கள்—முதலாளித்துவப் பிரதிநிதிகள், சமுதாயத்தை ஏமாற்றப் பார்க்கிறார்கள்! அரசியல்வாதிகள், இதை, அரசியல் இலாபத்திற்குப் பயன்படுத்தப் பார்க்கிறார்கள்!

"அரசியல் கருத்துக்கள் காரணமாகத் தொழிலாளர்கள் மத்தியில் பிளவு ஏற்பட்டுவிடக் கூடாது!

"எதிர்காலத்தில் தொழிலாளர்கள், 'உரிமைகளைப் பெற்ற புதியதோர் சமுதாயத்தைப் படைக்கும் பணியில் வெற்றி பெறுவார்கள்' என்ற நம்பிக்கை இருக்கிறது!

"இன்றைக்கு எல்லாத் தரப்பினரும் [illegible]சக் கொள்கையை உண்மையாகவோ அல்லது வேறு ஏதாவது ஒரு காரணத்திற்காகவோ ஏற்றுக்கொள்கிறார்கள்; அத்தகைய சோஷலிச சமுதாயம் ஏற்படத் தொழிலாளர்கள் பாடுபட வேண்டும்."

இவ்வாறு, தொழிலாளர் நலத்துறை அமைச்சர் செ. மாதவன், ஏப். 26-ம் நாளன்று, சென்னைத் தொழிலாளர் சங்க (எம். எல். யூ.) 50-வது ஆண்டு பொன் விழாவைத் துவக்கிவைத்துப் பேசுகையில் வலியுறுத்தினார். தொழிற்சங்கம் இயங்கும் நிலை பற்றிச் சுட்டிக் காட்டி அவர் ஆற்றிய உரையாவது:—

"ஒவ்வொரு தொழிற் சங்கத்திலும், எந்த அரசியல் கட்சியை ஆதரிப்பது' என்ற போட்டிதான நிலவுகிறது.

தொழிற் சங்கங்களை, தொழிலாளர் நலனுக்காகத்தான் பயன்படுத்த வேண்டும்; எந்த அரசியல் கட்சிக்கும் பயன்படுத்தக் கூடாது.

தொழிலாளர் துன்பங்கள் போக்கப்பட வேண்டுமானால்—பாட்டாளிகளின் நலன் பாதுகாக்கப்பட வேண்டுமானால் ஒரு தொழிற்சாலைக்கு ஒரு தொழிற் சங்கம்தான் இருக்க வேண்டும்; அதில் கட்சி அரசியலுக்கு இடமிருக்கக் கூடாது. பூசல்கள் வராமல் தடுப்பதற்கு இதுவே வழியாகும். இது பற்றித் தொழிலாளர்களும், தொழிற் சங்கத் தலைவர்களும் தான் தீர்மானிக்க வேண்டும்.

தொழிற் சங்கத் தலைவர்களுக்கு, தனிப்பட்ட முறையில் அரசியல் கருத்துக்கள் இருக்கலாம்; ஆனால் தொழிற் சங்கத்தில் அதைக்கொண்டு வரக்கூடாது.

வியப்புக்குரியது!

'தொழிலாளர்கள் பிரச்சினையில் அரசாங்கம் தலையிடக்கூடாது' என்று ஒருபுறம் கூறப்படுகிறது; மறுபுறத்தில் 'அரசாங்கம் இந்தப் பிரச்சினையில் தலையிடாமல் இருப்பது ஏன்?' என்று கேட்கிறார்கள்.

எனவே 'எந்தெந்தச் சமயங்களில் தொழிலாளர்கள் பிரச்சினையில் அரசாங்கம் தலையிடலாம்' என்பது பற்றித் திட்டவட்டமான ஒரு முடிவை எடுக்கவேண்டும்.

தொழிற்சங்க இயக்கம் ஏற்பட்டு ஐம்பது ஆண்டுகளாகியும், இன்னின்ன பிரச்சினையில்—இன்னின்ன கட்டங்களில் அரசாங்கம் தலையிடலாம்' என்பதைக் கூட வரையறுத்துக் கூற முன்வராதது, வியப்புக்குரியதாகும்.

தொழில் அதிபர்களாயினும் சரி—தொழிலாளர் தலைவர்களாயினும் சரி—தங்களுக்குச் சாதகமான நிலை ஏற்படும்போது, 'அரசாங்கம் தலையிடவேண்டும்' என்று கோருகின்றனர்; இந்தப் போக்குக் கூடாது.

அரசின் நிலை என்ன?

தொழிலாளர்களுக்குப் பாதகமான நிலைமை ஏற்படுவதை நங்கள் பார்த்துக்கொண்டிருக்க மாட்டோம்; ஆனால், அவர்களுக்குச் சாதகமான சட்டங்கள் இல்லை; போதிய அதிகாரங்கள் எங்களிடத்தில் இல்லை.

"தொழில் தகராறில் தலையிட்டு ஆவன செய்வதற்கு எந்த உருப்படியான அதிகாரமும் அரசுக்கு இல்லை; நீதிமன்றத்திற்கு அனுப்பலாம்; ஆனால், அதனால பிரச்சினைக்கு எளிதில் பரிகாரம் ஏற்பட்டுவிடாது."

பெற்ற விழுப்புண் இன்னும் ஈரமாகவே இருக்கிறது!

சென்னை, ஏப். 27—

"சோவியத் நாட்டிற்கும் – இந்தியாவுக்குமிடையே நட்புறவு நீடிக்க வேண்டுமென விரும்புபவர்களுடன் தி. மு. கழகம் தோளுடன் சேர்ந்து உழைக்கும்!

"பெரிய பெரிய பிரச்சினைகளையெல்லாம் சமாளித்தது சோவியத் நாடு! மூர்க்கர்களால்—முதலாளிகளால் அந்நாட்டு மக்கள் கல்வியற்றவர்களாக — அடிமைகளாக—தொழும்பர்களாக—பொட்டுப் பூச்சிகளாக—புன்மைத் தேரைகளாக ஆக்கப்பட்ட நேரத்தில், பொங்கிப் பீறிட்டு—எரிமலை போன்ற புரட்சி சக்தி லெனினால் ஏற்பட்டதன் விளைவாகத்தான், இன்றையத்தினம் சோவியத் நாடு, தொழிலாளர்களின் 'புனித பூமி'யாக மாறியிருக்கிறது என்பதனை யாரும் மறுப்பதற்கில்லை!

"சுதந்தரத்திற்காக ஒரு முறை இந்தியத் துணைக்கண்டம் விழுப்புண் பெற்றிருக்கிறது! சோவியத்தில் புதிய அரசு ஏற்பட அந்நாட்டு மக்கள் பலர் விழுப்புண் பெற்றதுடன், அந்த அரசைக் காத்திட மீண்டும் அவர்கள் விழுப்புண் பெற்றனர்!

"நாட்டுச் சுதந்தரத்திற்காக இங்கே ஒரு முறை விழுப்புண் பெற்றது மட்டுமன்றி, தமிழ்நாட்டில் இப்போது மொழிக்காகவும் நாங்கள் விழுப்புண் பெற்றிருக்கிறோம்! நீங்கள் பெற்ற விழுப்புண் காய்ந்துவிட்டிருக்கும்; ஆனால், நாங்கள் பெற்ற விழுப்புண் ஈரமாகவே இருக்கின்ற நேரத்தில் நீங்கள் வந்திருக்கிறீர்கள்; உங்களை வரவேற்பதில் மகிழ்ச்சியடைகிறோம்.

"'அறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் இயங்கும் தமிழக அரசு, தொழிலாளர்கள் அரசு! அப்படிப்பட்ட தொழிலாளர்கள் அரசு இங்கே உருவாகியிருக்கின்ற நேரத்தில் வந்திருக்கின்ற சோவியத் தொழிலாளர்களின் தலைவர்களை, தமிழகத்தின் சார்பில்—இந்தியாவின் சார்பிலேயே வரவேற்பதில் பெரு மகிழ்ச்சியடைகிறோம்."

—அமைச்சர் மு. கருணாநிதி

(சோவியத் அஞ்சல் -- தந்தி, தொலைபேசித் தொழிலாளர் தூதுக் குழுவினருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பில்)

தெ. ஆ. மாவட்ட தி.மு.க. குழுக் கூட்டம்

"தென்னாற்காடு மாவட்ட தி. மு. க. குழுக் கூட்டம், 30—4—68 இரவு 8 மணியளவில் விழுப்புரம் இரயில்வே பாலத்திற்குக் கீழ்ப்புறம் புதுவை செல்லும் சாலையில்—போலீசு நிலையம் அருகிலுள்ள சண்முகாபுரம் காலனியில் நடைபெறும்; அதுபோது, 10—5—68-ல் நடைபெறவிருக்கும் மேலவை இடைத் தேர்தல் பற்றியும், கழகத் தேர்தல்கள் பற்றியும் ஆராயப்படும்; மாவட்டக் கழக உறுப்பினர்கள் (அழைப்பு கிடைக்காத உறுப்பினரும்) தவறாது வந்து கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்"

என்று மாவட்டச் செயலாளர் இரா. சாம்பசிவம் அறிவிக்கிறார்.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

30--4--68

விழுப்புரம்

நகர தி.மு.க சார்பில் மாலை 6 மணிக்கு வடக்கு வீதி வாலாஜா திடலில்; தலைவர்: எம். சண்முகம் எம்.எல் ஏ.; பேசுவோர்: அமைச்சர்கள் மு. கருணாநிதி, ஏ. கோவிந்தசாமி, மற்றும் இரா. சாம்பசிவம், நாடாளுமன்ற உறுப்பினர்கள் வி. கிருஷ்ணமூர்த்தி, எம். தெய்வீகன், வி. மாயவன், டி. டி. இராமபத்திரன், சட்டமன்ற உறுப்பினர்கள் இரெ. இளம் வழுதி, இராமச்சந்திரன், வி. முனிசாமி, ஆர். ஆர். முனிசாமி, எம். இராசாங்கம், எம். ஆனந்தன், ஏ. ஜி. பாலகிருஷ்ணன், எம். இராமன், எஸ். பி. பச்சையப்பன், ஏ. கிருஷ்ணன், டி. கேசவலு. கோவிந்தராசன், மற்றும் ஏ. கிருட்டினமூர்த்தி, புலவர் வேங்கைமார்பன், எஸ். கோவிந்தசாமி, கே. வி. இராமகிருட்டினன் எம் ஏ பி.எல்., எஸ். ஏ. ஏழுமலை, பி. மேகநாதன் பி.ஏ.பி.எல்., வி. துரைராசு எம்.சி., பு.மா.லோ. சீனுவாசன்.

திருக்காம்புலியூர்

தி.மு.க. துவக்க விழா; மாலை 6-30 மணிக்கு கலைவாணர் திடலில்; தலைவர்: ம. மாணிக்கம்; பேசுவோர்: கேரள சுந்தரம், பெ. சௌந்தரபாண்டியன் எம்.ஏ., பி.எல்., எம்.எல்.ஏ., கு. வீ. முத்துசாமி, மணிமாறன், மற்றும் பலர்.

காரமடை

நாவலர் மன்றத் துவக்க விழா; மாலை 6-30 மணிக்கு காந்தி திடலில்; தலைவர்: சி. சுப்பிரமணியம்; பேசுவோர்: மு. தமீம், கோதண்டராமன், கு. தங்கவேலு பி.ஏ.,பி.எல்., கா. இரா. அரங்கநாதன், கெ.சு. மணியம். (காலை 9 மணிக்கு கு. தங்கவேலு மன்றத்தைத் திறந்துவைப்பார்; ப. இராமசாமி கொடியேற்றுவார்; வள்ளுவர், அண்ணா, நாவலர் படங்களை முறையே கெ.சு. மணியம், அரங்கநாதன், ரங்கசாமி ஆகியோர் திறந்துவைப்பர்.)

மறைவு

சென்னை 40-வது வட்டக் கழகத் தோழர் வ. மணிவண்ணன் அவர்களின் அண்ணியாரும் நீண்ட நாள் கழக உறுப்பினருமான தோழியர் பேபி அம்மையார் (வயது 29) கடந்த 21—4—68-ல் வேலூர் மருத்துவமனையில் இயற்கையெய்திய செய்தி வருத்தத்துடன் அறிவிக்கப்படுகிறது. அன்னாரின் பிரிவால் துயருறும் அவர்தம் குடும்பத்தாருக்கு வட்டக் கழகச் சார்பில் ஆழ்ந்த அனுதாபமும் ஆறுதலும் தெரிவிக்கப்படுகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்கள் ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24 சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.